# வந்தவாசி நகரமன்றக் கூட்டம்

## சாதாரணக் கூட்ட அறிவிப்பு

28.06.2019–ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 2.00 மணிக்கு நடைபெற்ற வந்தவாசி நகரமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

---

**முன்னிலை : ச.பார்த்தசாரதி,பி,ஏ.,**

தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர், வந்தவாசி நகராட்சி.

**பொருட்கள்**

**குறள் :**

கற்க கசடற கற்பவை கற்றப்பின்
நிற்க அதற்கு தக.

054. வந்தவாசி நகராட்சி இரண்டாம்நிலை நகராட்சியில் 26.06.2019 அன்று நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

**பொருள்:**

நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதம் ந.க.எண். 48800/2006/எல் நாள்.20.06.2019ல், தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி என்ற பணியமைப்பின் கீழ் புதிய பணியிடங்களை உருவாக்குவது தொடர்பாகவும், அதற்கு ஈடாக சில பணியிடங்களை திரும்ப ஒப்படைப்பது தொடர்பாகவும் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

நகராட்சிகளின் கணக்குகளை இன்றைய தேவைக்கேற்ப பராமரிக்கவும், நிதி மேலாண்மையை திறம்படுத்தவும், **தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி** என்ற பணியமைப்பு உருவாக்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சரவர்கள் 1.04.2013 அன்று சட்ட மன்றத்தில் அறிவித்தார் என்றும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணி உருவாக்குவதற்கான தீர்மானங்களை அனைத்து நகராட்சிகளும் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்துள்ளன என்றும், அத்தீர்மானங்கள் 13.06.2013 அன்று அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டன என்றும், இதனடிப்படையில் அரசாணை (எம்எஸ்) எண் 26, நகராட்சி நிர்வாக (ம) குடிநீர் வழங்கல் துறை (எம் இ1) நாள்.10.02.2016ல் தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பிற்கான பணி விதிகள் (Tamil Nadu Municipal Accounts Service Rules) 2016 உருவாக்கப்பட்டு 11.02.2016 அன்று அரசு கெஜட்டில் வெளியிடப்பட்டது என்றும், நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) மேலும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பின் கீழ் பணியிடங்களை புதிதாக உருவாக்க ஏதுவாக செம்பாக்கம், வாலாஜாப்பேட்டை, வந்தவாசி மற்றும் கீழக்கரை நகராட்சிகள் தவிர அனைத்து நகராட்சிகளும் தலா ஒரு இளநிலை உதவியாளர் பணியிடத்தை திரும்ப ஒப்படைத்து (Surrender) தீர்மானம் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்தன என்றும் அத்தீர்மானங்கள் 07.07.2017 அன்று அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| முதுநிலை கணக்கர் | Senior Accountant | 1 |
| கணக்கு உதவியாளர் | Accounts Assistant | 1 |

3) தற்போது தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணியின் (Tamil Nadu Municipal Accounts Service ) கீழ் இரண்டாம்நிலை நகராட்சிகளுக்கு ஒவ்வொரு நகராட்சிக்கும் கீழ்கண்டவாறு புதிய பணியிடங்கள் உருவாக்கிட திருத்திய கருத்துரு அரசுக்கு 03.01.2019 அன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு Tamil Nadu Municipal Accounts Service பணியமைப்பில் கணக்குப் பணிக்கான பிரத்யேக பணியிடங்களை உருவாக்குவதற்கு ஈடாக ஏற்கனவே தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணியில் (Tamil Nadu Municipal General Service) கணக்கு பணி தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள பணியிடம் / பணியிடங்களையோ அல்லது வேறு பணியிடத்தையோ ஒவ்வொரு நகராட்சியும் கூடுதல் சம்பள செலவினை தவிர்க்கும் பொருட்டு திரும்ப ஒப்படைக்க வேண்டியுள்ளது என்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார். இந்நகராட்சிகளில் கீழ்காணும் பணியிடத்தினை திரும்ப ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

Class VII இளநிலை உதவியாளர் பணியிடம் ஒன்று மட்டும்

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண். 985/2019/சி1 நாள்.26.06.2019

055. வந்தவாசி நகராட்சி சேத்பட்ரோடு கதவு எண்.67/W/1ல் உள்ள கட்டிடத்தை மாற்றம் செய்ய திரு.அ.செல்வராஜ் என்பவர் 31.08.2018ல் வரைபடம் சமர்ப்பித்திருந்தார். 31.08.2018ல் நேராய்வு செய்யப்பட்டதில் மாற்றம் செய்யப்பட்ட கட்டிட வரைபடம் வந்தவாசி நகராட்சி அதிகார வரம்பிற்கு மேற்பட்டதாக இருந்ததால் அனுமதி மறுத்து திருப்பப்பட்டது. மேலும் நகர் ஊரமைப்புத்துறை வேலூார் அவர்களுக்கு விண்ணபிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டது. இதன்மீது அ.செல்வராஜ் என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்கு எண்.WPNO.13689/2019 வழக்கினை எதிர்கொள்ள சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ.20,000/– தொகை வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 1436/2018/நஅஆ., நாள்.07.06.2019)

056.வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.14, தெற்கு செம்மடத் தெரு மற்றும் சன்னதிதெரு BSNL அலுவலகம் அருகில் மினிபவர் பம்புகள் மற்றும் இதர குடிநீர் பைப்லைனில் ஏற்பட்டு உள்ள நீர்கசிவு, உடைப்புகள் ஆகியவற்றை உடனுக்குடன் செய்து கொடுக்கும் பணிக்கு–பணி உத்திரவு வழங்குதல் தொடர்பாக.

1. ஆர்.கோவிந்தன் – 0.21% சதவீதம் மதிப்பைவிட குறைவு
2. ப.முருகேசன் –0.39% சதவீதம் மதிப்பைவிட அதிகம்
3. வி.சுந்தரம் –1.01% சதவீதம் மதிப்பைவிட அதிகம்

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் ரூ.0.21% சதவீதம் மதிப்பைவிட குறைவான விலைபுள்ளிக்கொடுத்துள்ள ஆர்.கோவிந்தன் அவர்களின் விலைப்புள்ளியினை மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஏற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் பதிவு செய்யலாம்

(ந.க.எண். /2019/இ1., நாள்.04.06.2019)

057.அரசாணை நிலை எண்.238, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.01.10.1997 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை–28 அவர்களின் கடிதம் ந.க.எண்.4980/2018/ஜே3/ நாள்.10.06.2019ன்படி ஒவ்வொரு ஆண்டும் நகராட்சியில் பணிபுரியும் ஓட்டுநர்கள் 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் விபத்துக்கள் இன்றி பணியாற்றி வருகின்ற ஒட்டுநருக்கு தங்கப்பதக்கம் வழங்கிட தகுதியான வந்தவாசி நகராட்சி வாாகன ஓட்டுநர் திரு.S.ராமமூர்த்தி ஓட்டுநருக்கு தங்கப்பதக்கம் வழங்கிட மேலாளர் (விற்பனை மற்றும் உற்பத்தி) தமிழ்நாடு கைவினை தொழில் முன்னேற்றக் கழகம் எண்.759, அண்ணாசாலை சென்னை–2 நிறுவனத்திடம் இருந்து விலைப்பட்டியல் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட நிறுவனத்தின் விலைப்பட்டியலில் 4 கிராம் 22 காரட் தங்கப்பதக்கம் விலை ரூ.17,100/–க்கான விலைப்பட்டியல் எண். RCNO. 912/ SP/ 18/ நாள். 17.06.2019 விலைப்பட்டியல் வரப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகை

ரூ.17100/–க்கு “Tamilnadu Handicratts Development Corporation Limited Chennai“ முகவரிக்கு வங்கிவரைவு அனுப்பக் கேட்டு விலைப்பட்டியல் வரப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட ‘‘தங்கப்பதக்கம் வழங்குதல்’’ செலவுத்தொகை ரூ.17,100/–க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். /2019/இ1., நாள்.17.06.2019)

058. வந்தவாசி நகராட்சியில் போதிய எழுத்தர் பணியாளர்கள் பற்றாக்குறை உள்ளதால் பொதுமக்களிடம் இருந்து வரப்பெறும் மனுக்கள் மீதும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவும், அலுவலகப்பணிகள் பாதிக்காத வண்ணம் பொதுமக்கள் நலன்கருதியும், பிரிவுஎழுத்தர்கள் பணிகளை கூடுதலாக எழுத்துப்பணிகள் மேற்கொள்ளவும், அரசாணை நிலை எண்.170/ நாள்.18.12.2009ன் வழிகாட்டுதல்படி நிபந்தனை வரிசை எண்.1 முதல் 10 வரையிலான நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்பந்த அடிப்படையிலும், எழுத்தர் பணிக்கு திரு.அ.சர்புதீன், முன்னாள் எழுத்தர் என்பவரை பிரதிமாதம் ரூ.12,428/– வீதம் மே–2019 முதல் அக்டோபர் 2019 வரை 6 (ஆறு) மாதத்திற்கு எழுத்தர் பணிகளை மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

நகராட்சியில் போதிய எழுத்தர் பணியிடங்கள் பற்றாக்குறையாக உள்ளதால் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கவும், அரசாணை நிலை எண்.170, நாள்.18.12.2009ன்படியும், நிபந்தனை வரிசை எண்.1 முதல் 10 வரையிலான நிபந்தனைக்குட்பட்டு எழுத்தர் பணியினை ஒப்பந்த அடிப்படையிலும் மேற்கொள்ள பிரதிமாதம் ரூ.12,428/– வீதம், மே–2019 முதல் அக்டோபர் 2019 வரையிலும், 6 (ஆறு) மாதத்திற்கு செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண்.0894 /2019/எச்1., நாள்.20.06.2019)

059.வந்தவாசி நகராட்சி பகுதியில் தற்பொழுது டெங்கு நோய் தடுப்பு மற்றும் மர்மக்காய்ச்சல் நிகழ்வு தடுப்பு நடவடிக்கைக்கு வார்டு 24 பகுதிகளிலும் வீடு வீடாக சென்று கொசு புழு ஒழுப்பு பணிக்கு மற்றும் புகை மருந்து வீட்டின் உட்புறம் மற்றும் வெளிபுறம் பணி செய்திட நோய்கள் தோன்றா வண்ணம் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.4414/2019/பஈ2, நாள்.28.04.2019 மற்றும் துணை இயக்குநர் சுகாதார பணிகள் செய்யாறு அவர்களின் ந.க.எண்.2833/இ4/2013 நாள்.02.05.2019ன்படி நகராட்சி பகுதியில் 35 எண்ணிக்கையில் மஸ்துார்களை நியமிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

வந்தவாசி நகராட்சியின் நிதிநிலையை கருத்தில்கொண்டு 30 நபர்களை டெங்கு நோய் தடுப்பு தற்காலிக பணிக்கு பணி அமர்த்திக்கொள்ளவும், தனியர்களை 02.05.2019 முதல் 31.07.2019 வரை 3 (மூன்று) மாதங்களுக்கு பணி அமர்த்திடவும் அதற்கு உண்டான செலவு செய்யாறு சுகாதார மாவட்ட துணை இயக்குநர் கடிதம் ந.க.எண்.2833/இ4/2013, நாள்.21.07.2016ன்படி ரூ.200/– வீதம் ஒரு நாளைக்கு ஒரு பணியாளருக்கு வழங்க கடிதம் வரப்பெற்றுள்ளது. இதற்கு ரூ.6.00 இலட்சத்துக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு</u>

அனுமதிக்கப்படுகின்றது.

(ந.க.எண்.1530 /2017/எச்1., நாள்.03.05.2019)

060. வந்தவாசி நகராட்சியில் வறட்சிநிதி (SRDF) 2018–2019 –ன் கீழ் கீழ்கண்ட விபரத்தில் காணும் பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>விபரம்</u>

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| | வறட்சி நிதி –2018 – 2019 (SRDF) | |
| 1. | தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மூன்று திறந்தவெளி கிணறுகளுக்கு ஆழப்படுத்தும் பணி. | 4.00 |
| 2. | வந்தவாசி நகராட்சி பகுதியில் பழுதடைந்துள்ள கைபம்புகளின் உதிரி பாகங்கள் மாற்றி பழுதுபார்த்தல் பணி | 2.00 |

<u>அலுவலக குறிப்பு–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.792 /2019/இ1, நாள்.            )

**<u>061. MLA FUND - 2016 –2017 & 2017 –2018 & 2018 –2019</u>**–ன் கீழ் கீழ்கண்ட விபரத்தில் காணும் பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| | **MLA FUND –2016 – 2017** | |
| 1. | வந்தவாசி நகராட்சியில் 7 வது வார்டு கலாய்க்காரத்தெரு கால்வாய் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்தல். | 6.00 |
| | **MLA FUND –2017 – 2018** | |
| 1. | வந்தவாசி நகராட்சிக்கு புதிய பேருந்து நிலையம் அருகில் பூங்கா அமைத்தல் பணி. | 21 . 00 |
| | **MLA FUND –2018 – 2019** | |
| 1 | வந்தவாசி நகராட்சி 6வது வார்டு கே.எஸ்.கே.நகர் நியாயவிலைக்கான கட்டிடம் கட்டுதல் | 11 .13 |
| 2 | வந்தவாசி நகராட்சி 1–வது மற்றும் 2வது வார்டு நியாயவிலைக்கடைகட்டிடம் கட்டுதல் (கோட்டைகாலனி), | 11 .13 |
| 3 | வந்தவாசி நகராட்சி 23–வது வார்டு கலைஞர் நகர் நியாயவிலைக்கட்டிடம் கட்டுதல் பணி | 11 .13 |
| 4 | வந்தவாசி நகராட்சி 18 வது வார்டு பெரிய காலனி மழைநீர் வடிகால் அமைத்தல் | 2.00 |
| 5 | வந்தவாசி நகராட்சி 24 வது வார்டு திருநீலகண்டர் தெரு மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 2.00 |
| 6 | வந்தவாசி நகராட்சி 17வது வார்டு நாதமுனி தெரு மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 1.00 |
| 7 | வந்தவாசி நகராட்சி 17வது வார்டு காமராஜர்நகர் கல்வெர்ட் அமைத்தல் . | 2.00 |

<u>அலுவலக குறிப்பு–</u>

2. மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.843 /2019/இ1, நாள்.            )

062. வந்தவாசி நகராட்சியில் வறட்சிநிதி (SRDF) 2019–2020 –ன் கீழ் கீழ்கண்ட விபரத்தில் காணும் பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>விபரம்</u>

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| | வறட்சி நிதி –2019 – 2020 (SRDF) | |
| 1. | வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள ஆழ்துளை | 4.50 |

| | | |
|---|---|---|
| | கிணற்றில் உள்ள பழுதடைந்த பழைய 1 HP மின்மோட்டார் பதிலாக புதிய மின்மோட்டார் பொருந்துதல் பணிக்கு 15 எண்ணிக்கை வாங்குதல் பணி. | |
| 2. | வந்தவாசி நகராட்சி எச்சூரில் உள்ள நீரேற்று கிணற்றுக்கு புதியதாக 5 எண்ணிக்கை 5 HP நீர்முழகி மோட்டார் வாங்குதல் பணி. | 4.50 |
| 3 | வந்தவாசி நகராட்சி வார்டு எண்.6,18,19 வார்டுகளில் புதியதாக ஆழ்துளை குழாய்கள் அமைத்தல் பணி. | 8.00 |

<u>அலுவலக குறிப்பு–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.898 /2019/இ1, நாள்.                )

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
வந்தவாசி நகராட்சி